சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.220/2019

20.08.2025

வா.சா.1 திரு.ஷேக்அலாவுதீன், த/பெ. கச்சி நைனார்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

ஹாஜாஅலவுதினிடமிருந்து தாவா சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்தில் ஜாஹீர் உசேன் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். ஜாஹீர்உசேன் அனுமதி வாங்கி வீடு கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா இடத்திற்கு மேல்புறம் ஜாஹீர் உசேன் வீடு உள்ளது என்றால் சரிதான். ஜாஹீர்உசேனை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சேர்த்துள்ளேன். ஜாஹீர்உசேனை வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் அவரின் மனைவியை தரப்பினராக சேர்த்துள்ளதால் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் பிரதிவாதிகளான ஹாஜாஅலாவுதின், பஜ்ரியாவை மட்டுமே தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் கச்சி நைனார் ராவுத்தர் என்றால் சரிதான். ஜெய்னாம்பு கனியம்மாள் எனது தாயார் ஆவார். ஹாஜாஅலாவுதீனும், ரபியாத்துல்பஜ்ரியாவும் அண்ணன், தங்கை என்றால் சரிதான். அவர்களின் தகப்பனார் பெயர் ஷேக்யூசுப் என்றால் சரிதான். எனது தகப்பனார் தாவா சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகளின் தகப்பனார் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் என்னிடம் சொல்லவில்லை எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேல்புறம் உள்ள சுவர் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும் ஏற்கனவே சமரசம் பேசப்பட்டு அ.வ.எண்.2/2023 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1976 ஆம் ஆண்டு மேல்புற சுவர் இடிக்கப்பட்டது என்றால் இல்லை, கொல்லைபுற சுவர் தான் இடிக்கப்பட்டது. தாவா சொத்தில் எனது தகப்பனார் சுவர் எழுப்பிக்கொள்ள பிரதிவாதிக்கு அனுமதி வழங்கினார் என்றால் இல்லை. கொல்லைபுற சுவருக்கு தான் அனுமதி வழங்கினார். உண்மையை மறைத்து தற்போது பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் பகுதிகிழக்கு பகுதி என்றாலும் அதற்கு மேல்பகுதி பிரதிவாதி குடியிருக்கிறார் என்றாலும் சரிதான். மேற்புறம் உள்ள சுவர் எங்களுக்கு சொந்தமானதாகும்.

மேற்புற சுவர் இருவருக்கும் பொதுவானது என்று தான் வீடு கட்டப்பட்டது என்றால் இல்லை. நான் உரிமை கொண்டாடும் சொத்திற்கு சர்வேயர் வைத்து அளவீடு செய்தேன் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு நீதிமன்றம் மூலமாக அளக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் மூலம் அளவீடு செய்தால் எனக்கு சொந்தமான சொத்தின் விஸ்தீரணம் தெரியவரும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின் படி என் வீட்டிற்கு மேல்புற சுவர் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் மேல்புற சுவர் எனக்கு சொந்தமானது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் உரிமை கோருகிறேனா என்றால் ஆமாம். நான் உரிமை கோரும் ஆவணத்தின் சர்வே எண் 39/18 பழைய புல எண் 39. புல எண் 39 க்கு எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு பழைய புல எண் 39 இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் புல எண் 39/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் விஸ்தீரணம் 10 சென்ட் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் ஓட்டுவில்லை வீடு, கொல்லை, வாள்வீச்சு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்து மேல்புற சுவர் சொந்தம் என குறிப்பிட கேள்வி எழுப்பிய நிலையில் சாட்சி பதிலளிக்க மறுத்துவிட்டார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேல்புற சுவர் எங்களுக்கு சொந்தம் என குறிப்பிடாததால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. பிராதில் 150 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட பழைமையான ஓட்டுவீடு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு மண்சுவரால் கட்டப்பட்ட வீடு என்றால் சரியல்ல. கல்லால் கட்டப்பட்டு சிமெண்ட் பூச்சு பூசப்பட்ட வீடு. கட்டிடம் முழுவதும் மண்சுவரால் கட்டப்பட்டது என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இரண்டு வருடங்களாக வீடு இடிக்கப்பட்டதால் அச்சுதமங்கலத்தில் வசிக்கிறேன். வழக்கு தாக்கல் செய்த போது அச்சுதமங்கலத்தில் வாடகை வீட்டில் இருந்தேன். 2015 ஆம் வருடம் வரை பிரதிவாதிகள் வசித்து வந்தார்கள். 2018 ஆம் வருடம் கஜா புயலால் மேல்கூரை இடிந்து விட்டது என்றால் இல்லை. பிரதிவாதிகள் ஜேசிபி வைத்து இடித்ததால் தான் இடிந்தது. இந்த விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்தபோது அச்சுதமங்கலத்தில் வசித்து வந்த நிலையில் பள்ளிவாசலில் வசித்து வருவதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஜமாத்தில் மேல்புற சுவர் இடிந்து உயிருக்கு ஏற்படுத்தும் வகையில் இருந்ததால் இடிக்கவேண்டும் என பேசி முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆளுக்கு முக்கால் அடி என பேசப்பட்டது. மேல்புற சுவர் 1 1/2 அடி அகலம் என்றாலும் அதில் நானும் பிரதிவாதியிம் 3/4 அடி வைத்துக்கொள்ள பேசப்பட்டது என்றால் சரிதான். பேசிய படி பிரதிவாதிகள் 3/4 அடியில் தான் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பேசியபடி அவர்கள் கட்டவில்லை. பிரதிவாதி பேசியபடி தான் கட்டிடம் கட்டியுள்ளார் என்றாலும் நான்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதவாதிகள் எக்காலத்திலும் எங்கள் இடத்தை ஆக்ரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனாருக்கு 7 சென்ட் இடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. யூசுப்பின் வாரிசுகள் விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் ஹாஜாஅலாவுதீன் விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியாது. நில அளவையர் அளந்த பின்னிட்டுதான் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஏற்கனவே ஒப்புக்கொண்டுவிட்டதால் அதற்கு பின்னிட்டு நான் பேசுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில்தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் வீடு கட்டி முடித்துவிட்டார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீடு கட்டி முடித்துவிட்ட நிலையில் நான் கேட்கும் உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டிய வீட்டிற்கு வீட்டு வரி ரசீது கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2019 ஆம் வருடம் பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்ட நிலையில் நான் ஆட்சேபணை செய்தேனோ என்றால் நான் வெளியூரில் இருந்ததால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனவே நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றாலும் தாவா சொத்து பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி 1 1/2 அடி அகலமும் 66 அடி நீளமும் இடத்தை ஆக்கிரமித்துவிட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.